* 435 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government are getting any financial aid in a big way from the Central Government to meet the expenses for translating text books in regional languages so that education at all levels and in all fields could be imparted in regional language?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கே. விநயகம் : சார், சமீபத்திலே கூடிய கல்வி மாநாட்டில், டெல்லியில் நமது மத்திய கல்வி அமைச்சர், அதிகமாகத் தொகை தருவதாகவும் அதற்கான ஏற்பாடுகளை மாநில சர்க்கார் செய்ய வேண்டும் என்றும் சொல்லியிருப்பது அமைச்சருக்குத் தெரியாதா? அந்தத் தொகையைப் பெற்றுக் கொண்டு, பாட புத்தகங்களை மொழி பெயர்க்க தேர்ச்சியடைந்த ஆசிரியர்கள் இல்லையா? மொழிபெயர்க்கத் தத்தளிப்பது எதனால்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், மத்தியக் கல்வி அமைச்சர் ஒவ்வொரு வட்டார மொழிக்கும் ஒரு கோடி ரூபாய் கொடுப்பதாகவும், மொத்தம் 18 கோடி மொழிப் பயிர்ச்சித் திட்டங்களுக்கு கொடுக்க இருப்பதாக வும், நிதி இலாகா அதை ஒப்புக் கொண்டதற்குப் பிறகு திட்டங் களைக் கொடுப்பதாகவும் குறிப்பிட்டார்கள். நிதி இலாகா கல்வி அமைச்சருக்கு இன்னும் ஒப்புதல் தரவில்லை. ஒப்புதல் வராத தால், ஒரு கோடி ரூபாயும் வரவில்லை. ஒரு கோடி ரூபாய் வராத தால் முயற்சி எடுக்கவில்லை. அந்தப் பணம் வந்தால், தத்தளிக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. இங்கே ஆற்றல் படைத்த வர்கள் இருக்கிறார்கள். அந்த ஒரு கோடி வருமானால், அதையும் இன்னும் மேலும் சில கோடிகளும் செலவழிக்கக் கூடிய திட்டம் தரலாம் என்கிற துணிவோடுதான் இந்த அரசு பணியாற்றுகிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, மத்திய சர்க்காரிடமிருந்து பிராந்திய மொழிக்கு அதிகமாக நிதி உதவி கிடைக்கிறதா அல்லது இந்தி மொழிக்கு அதிகம் கிடைக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப் பற்றி முடிவு வரவில்லை. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு கோடி தருவதாகக் குறிப்பிட்டபோது, இந்தி மாநிலங்கள் ஐந்து இருப்பதால், ஐந்து கோடியைப் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது ஆகவே, மாநில அடிப்படையில் அல்லாமல், மொழி அடிப்படையில் இருக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதைப் பரிசீலிப்பதாகவும் மத்திய கல்வி அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள்.

* 436 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether it is a fact that Madras University has permitted the colleges affiliated to it to start separate sections for Tamil medium B.A. Degree Courses in humanities; and

(b) if so, the suitable incentives to persuade students to join this course?